Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.242/2025 PW-6**

Name : கோவிந்தசாமி
Father / Husband name : மாணிக்கம்
Village : சித்தேரிப்பட்டு
Age : 47
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 23.07.2026

Accused 1, 2 present. Both side counsel present. Witness identified by Roshanai PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் தற்போது பெயிண்டிங் வேலை செய்துவருகிறேன். சாட்சி வீராசாமி என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை சுமார் 1 வருடத்திற்கு முன்னதாக ரோசணை காவல் நிலையத்தில் செய்தேன். எந்த வழக்கு என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 12.04.2025 ந்தேதி காலை 11 மணிக்கு நீங்களும் உங்கள் ஊரை சேர்ந்த வீராசாமி என்பவரும் சேட்டு வீட்டின் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றால் இல்லை. அப்போது ரோசனை காவல் நிலைய போலிசார் பாஸ்கர் மற்றும் குபேந்திரன் ஆகியோர்களுக்கு ஏற்பட்ட சண்டை

வழக்கு சம்மந்தமாக சம்பயவிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரிதான். அப்போது நானும் வீராசாமியும் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள கையொப்பத்தை காவல் நிலையத்தில் செய்தேன் என்றால் சரிதான். அப்போது மணி என்ன இருக்கும் என்றால் 9 மணி இருக்கும். நான் கையொப்பம் செய்த பேப்பரில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் மேப் போடுவதற்கு என்னிடம் விவரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.242/2025 PW-7**

Name : மருத்துவர் மோனிஷா
Father / Husband name : தில்லைவாசகம்
Village : மதுராந்தகம்
Age : 34
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 23.07.2026

Accused present. Both side counsel present. Witness identified by Roshanai PS HC 2735 Tr.Palanivel.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராகக பணிபுரிகிறேன். கடந்த 11.04.2025 அன்று இரவு 09.20 மணியளவில் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவிலிருந்தபோது சின்னக்குழந்தை, வயது 40 என்பவரை அவரின் மகன் முத்துக்குமரன் சிகிச்சைக்காக அழைத்துவந்தார். அவரை விசாரணை செய்ததில் அவரை அன்றையதினம் இரவு 08.00 மணிக்கு சித்தேரிப்பட்டில் அடையாளம் தெரிந்த 15 நபர்கள் இரும்பு ராடால் தாக்கியதாக கூறினார். அப்போது அவர் சுயநினைவோடு இருந்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு வலது பக்க தலையில் கிழிந்தக்காயம் இருந்தது, வலது கண்ணின் பக்கத்தில் சிராய்ப்புக்காயம் இருந்தது. அவருக்கு வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து சிடி பிரைன் எடுக்க அறிவுறுத்தினேன். அவருக்கு ஏற்பட்டக்காயம் சொற்பக்காயம் என்று சான்று வழங்கினேன். காயம்பட்ட நபர் சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் மேற்படி காயம் ஏற்படவாய்ப்புள்ளது. **சின்னக்குழந்தையின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. அன்றையதினமே இரவு 09.25 மணியளவில் திண்டிவனம் அரசு

மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவிலிருந்தபோது முருகதாஸ் என்பவரை அவரின் மாமா முருகன் சிகிச்சைக்காக அழைத்துவந்தார். அவரை விசாரணை செய்ததில் அவரை அன்றையதினம் இரவு 08.00 மணிக்கு சித்தேரிப்பட்டில் அடையாளம் தெரிந்த 1 நபர் கையால் அடித்து கீழே தள்ளிவிட்டதாக கூறினார். அப்போது அவர் சுயநினைவோடு இருந்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு இடது பக்க தோள்பட்டையில் Restriction of Movements இருந்தது. அவருக்கு வெளிநோயாளியாக சிகிச்சை அளித்து இடது பக்க தோளில் எக்ஸ்ரே எடுக்க அறிவுறுத்தினேன். அவருக்கு இடது பக்க தோளில் எடுக்கப்பட்ட எக்ஸ்ரேவில் இடது Clavicle எலும்பு முறிவு காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்டக்காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். காயம்பட்ட நபர் சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் மேற்படி காயம் ஏற்படவாய்ப்புள்ளது. **முருகாதாஸ் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காயத்தின் வயது, நிறம், தன்மை விபத்து விபத்து பதிவேட்டில் கூறவில்லை என்றால் சரிதான். கிழிந்தகாயத்தின் அளவு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்தக்காயத்திற்கு தையல் போட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன், எத்தனை தையல்கள் என்று சொல்லவில்லை. சிகிச்சைக்கு வந்த நபர் தடியால் தாக்கியதாக சொல்லவில்லை, இரும்பு ராடால் தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சின்னக்குழந்தை தன்னை அடித்து கீழே தள்ளியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சின்னக்குழந்தைக்கு ஏற்பட்டக்காயம் தடுக்கி கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

2. முருகாதாஸ் வெளிப்புறநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். அவருக்கு எந்த தேதியில் எக்ஸ்ரே எடுக்கப்பட்டது, அதனை எந்த

தேதியில் நான் பார்வையிட்டேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேல்சிகிச்சை ஆவணங்களை நான் பார்வையிட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முருகதாஸ் தன்னை தடியால் தோள்பட்டையில் தாக்கியதாக சொல்லி சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். தன்னை கல்லால் மாறி மாறி அடித்துவிட்டதாக சொல்லி சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். Clavicle எலும்பு முறிவு ஒருநபர் கீழே தடுமாறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். பொதுவாக காயத்தின் நிறத்தை குறிப்பிட்டு சொன்னால் தான் எவ்வளவு நேரத்திற்கு முன்பு காயம் ஏற்பட்டது என்று சொல்ல இயலும் என்றால் சரிதான். நேரம் தள்ளிபோக காயத்தின் நிறம் மாறும் என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.